# வாக்குமூலம்

## சார்பு நீதிமன்றம் , நான்குநேரி

## வழக்கு எண்:SC- 62/2024

## வழக்கு சாட்சி:PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | முருகன் | தேதி : | 04.02.2025 |
| தந்தை பெயர்: | சுடலையாண்டி கோனார் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது: | |

(எதிரி ஆஜர்)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 04.02.2025

**முதல் விசாரணை**

நான் களக்காடு ஜே.ஜே.நகரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். அசா1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நான்குநேரி மெயின்ரோட்டில் உள்ள ராஜாராம் என்பவருக்கு சொந்த சா மில்லில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 05.03.2013 தேதி காலை 10 மணிக்கு நான் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் சமயத்தில் ஆஜர் எதிரி மற்றும் அவருடன் பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய 5 நபர்கள் சா மில்லிற்கு தெற்கு காம்பவுண்டு சுவரை மேற்கிலிருந்து இடித்து சேதப்படுத்தினார்கள். நான் மற்றும் என்னுடன் வேலை பார்க்கும் களக்காடு ஊரை சேர்ந்த நடராஜன் மகன் முத்து மற்றும் ராஜாராம் இருந்தோம். அங்கு சென்று ராஜாராம் அவருரிடம் ஏன் சுவரை இடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரி ராஜாராமை பார்த்து தேவடியா மகனே, செருக்கி மனே என்று அசிங்கமாக பேசி அப்படிதான் சுவரை இடிப்போம் தடுத்தால் கடப்பாரையை வைத்து அடித்து கொன்றுவிடுவோம் என்றார்கள். நாங்கள் சத்தம் போடவும் எதிரி ராஜாராமை

பார்த்து இன்று தப்பிவிட்டாய், உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள். ராஜாராம் எதிரி மீது நடவடிக்கை எடுக்க கோரி களக்காடு காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தார். அதன் பேரில் எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் நீதிமன்றத்தில் ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள உடைந்த ஹாலோபிளாக் சிமெண்ட் கல் 1 என்னால் இன்று நீதிமன்றத்தில் அடையாளம் காட்டப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.